# மாவனல்ல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 03 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 19 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மாவனல்ல பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்தததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவனல்ல பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,762,495 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக ஐந்தொகையில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளின் பெறுமதியானது அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவின் போது பெறப்பட்ட கழிவுப் பெறுமதியான ரூபா 28,730 தொகைக்காக பெறப்பட்ட நூலகப் புத்தங்களின் பெறுமதி கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக ஐந்தொகையில் புத்தங்களின் பெறுமதி அப் பெறுமானத்தினால் குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 30,000 என காட்டப்பட்டிருந்த ஹிங்குல மலசலகூடங்கள் பல வருட காலத்திற்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதும், மேலும் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்ததனால் நிலையான சொத்துக்களின் பெறுமானம் அத் தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 206,205,629 ஆக இருந்ததுடன், பயன்படு ஏடுகள் /அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 194,524,627 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,555,590 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

#### பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையில் 03 மாதகாலம் கடந்த 01 கணக்காய்வு ஐய வினாவிற்கு பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாவிற்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 1,379,772 ஆக இருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் இலக்கம் 49 மற்றும் 52 ஆம் பிரிவுகள் | பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்களின்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள், அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடைத்து அகற்றுவதற்கான அதிகாரம் பிரதேச சபைக்கு இருந்த போதிலும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்டரீதியற்ற 07 கட்டிடங்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 371(ஆ) | குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக உபகட்டு நிதியாக வழங்கப்பட்ட பணத்தில் எஞ்சிய தொகையினை உரிய செயற்பாடு பூர்த்தியடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 221,950 தொகையான உபகட்டு நிதியினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 570 | வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்கள் கடந்த வைப்புக்கள் காலம் கடந்த வைப்புக்களாகக் கருதி நிதிப்பிரமாணத்தின் |

| | | |
|---|---|---|
| | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 118,284 தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதத்திற்கும் ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளை பூரணமாக நிறைத்து ஓடிய தூரத்திற்கான எரிபொருள் செலவு பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய 10 வாகனங்கள் சம்பந்தமாக எந்தவொரு தினத்திலும் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சுற்றுநிருபம் | |
| | (i) இலக்கம் 03 இன் (1) ஆம் பந்தி | சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படுகின்ற காணி விற்பனை தொடர்பான தகவல்கள் மற்றும் விபரங்கள் வருமானப் பரிசோதகர் / கட்டுப்பாட்டாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) இலக்கம் 03 இன் (ii) மற்றும் (iii) ஆம் பந்திகள் | காணி விற்பனைக்குரிய கூறிடல் திட்டங்களை அங்கீகரிக்கமுன் விற்பனை செய்வதற்குள்ள நிலத்துண்டுகளின் விற்பனைப் பெறுமதி சம்பந்தமாக சபையின் வருமானப் பரிசோதகர் / கட்டுப்பாட்டாளர் ஊடாக தற்காலிக மதிப்பீடொன்று பெறப்படவேண்டியிருந்ததுடன் அம்மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு விற்பனையாளரிடமிருந்து 1% இற்குச் சமமான வைப்புப் பணம் பெறப்பட வேண்டியிருந்த |

போதிலும் 05 ஏக்கர் அளவான ஹித்தா தெனியகேன காணி ஏல விற்பனையின் போது அவ்வாறான மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) இலக்கம் 03 இன் (vi) ஆம் பந்தி

விற்பனையின் மூலம் பெறப்படுகின்ற காணியின் அளவில் 10% ஆன நிலத்தின் அரைவாசி பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு காணி உறுதியின் மூலம் கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பழைய வலவ்வத்த, ரொக்சிவத்த மற்றும் ஹித்தாதெனிய கேன போன்ற காணிகளின் ஏல விற்பனையின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இலக்கம் 03 இன் (x) ஆம் பந்தி

சபையின் வருமானப் பரிசோதகர்/ கட்டுப்பாட்டாளர் காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பிய அக்காணிகளை விற்பனை செய்வதற்குரிய உறுதிகளின் இலக்கம் மற்றும் பெறுமதிகள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டு விற்பனையாளரினால் வழங்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் தகவல்கள் போன்வற்றின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1993 திசெம்பர் 31 ஆந் திகதிய பீபீஏ/6/1/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்று நிருபம்

(i) அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் சென்று நாட்டுக்குள் திரும்பிய 07 தினங்களுக்குள் தமது பயணம் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரித்து வெளிநாட்டுப் பயணத்தை அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தலைவரினால் 2008-2010 ஆம் ஆண்டு

காலப்பகுதியினுள் ஈடுபட்டிருந்த 05 சுற்றுப் பயணம் தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசுடன் தொடர்பான நபர்களினால் ஈடுபட்டிருந்த சகல உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களினாலும் நாட்டுக்கு ஏதாவது பிரதி பலன்கள் கிடைக்க வேண்டும் எனக்காட்டப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களினால் அவ்வாறான பிரதி பலன்கள் கிடைத்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

| | | |
|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்தி | வேலை ஒப்பந்த உடன்படிக்கைகளில் விவசாயச் சங்கங்களுக்கு காப்புறுதிப் பூட்கையின்றி உச்ச தொகையாக ரூபா 200,000 முற்பணமாகச் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அத்தொகையினை விஞ்சி ஒப்பந்த காரர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 400,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,124,752 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,764,328 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 கிடைக்க வேண்டிய வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவைவருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள வாறான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 9,013 | 3,459 | 13,530 | 4,010 | 3,086 | 6,667 |
| (ii) | வாடகை | 10,500 | 11,013 | 720 | 10,000 | 9,518 | 2,606 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,300 | 1,483 | (140) | 1,000 | 960 | 151 |
| (iv) | ஏனைய வருமானம் | 94,246 | 19,496 | 83,160 | 20,661 | 16,765 | 7,735 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 8,674,767 தொகையான தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 19,855,975 கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.4 கடை வாடகை**

(அ) பிரதேச சபையினால் வாடகைக்கு விடப்படுகின்ற ஏதாவது நிலையத்திலிருந்து அறவிட வேண்டிய வாடகை, அறவிட வேண்டிய திகதியிலிருந்து 14 தினங்களுக்குள் சபையின் காரியாலயத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்தால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாடகை செலுத்தாதவர்களின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களைத் தடை செய்து விற்பனை செய்வதன் மூலம் வாடகையினை அறவீடு செய்ய முடியும் என காட்டப்பட்டிருந்தும் 2002 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற இறைச்சி மற்றும் மீன் கடைகளின் நிலுவைப் பணமான ரூபா 704,513 இனை அதன் படி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறைச்சி மற்றும் மீன் கடைகளின் வியாபார உரிமையினை வருடாந்தம் வாடகைக்கு விடும் போது மத்திய சந்தையின் 02,03,04,05 ஆம் இலக்க கடைகளுக்காக வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீர்க்கட்டணம்**

தற்போது அமுல்படுத்தப்படாதுள்ள மாவெல நீர் வழங்கல் உத்தேசத் திட்டத்திலிருந்து அறவிட வேண்டியதும் பல வருட காலத்திற்கு முன்னிருந்து காணப்படுகின்ற நிலுவைப் பணமான ரூபா 97,093 தொகையினை அறவீடு செய்வதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப் பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 33,684 | 32,104 | 1,580 | 30,509 | 29,821 | 688 |
| ஏனையவை | 40,456 | 100,215 | (59,759) | 25,770 | 77,784 | (52,014) |
| உப மொத்தம் | 74,140 | 132,319 | (58,179) | 56,279 | 107,605 | (51,326) |
| மூலதனச் செலவினம் | 60,473 | 28,681 | 31,792 | 88,100 | 39,476 | 48,624 |
| மொத்தம் | 134,613 | 161,000 | (26,387) | 144,379 | 147,081 | (2,702) |

## 2.4 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 1,250,000 ஆக இருந்தது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவிநிலைத்தரங்கள் | 03 | 03 |
| இரண்டாம் தரங்கள் | 35 | 31 |
| ஆரம்ப தரங்கள் | 57 | 56 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 31 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடையதாகக் காணப்படுகின்ற ரூபா 1,731,289 பெறுமதியான பௌதீக வளங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,183,053 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 917,925 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,618,625 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 112,673 ஆக இருந்தது.

### 2.6.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,200 ஆக இருந்தது.

### 2.6.5 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 179,767,288 ஆக இருந்தது.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

(I) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது சபையினால் பேணப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 1,143,585 பெறுமதிக்குரிய நட்டங்களும் இழப்புக்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(II) ஹிங்குல சந்தைத் தொகுதியிலுள்ள 05 கடைகளிலிருந்தும் 2003 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகக் காணப்படும் ரூபா 1,143,585 தொகையொன்றைப் பதிவழிப்பதற்கு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையின் காரணமாக அந்நிலுவைப் பணத்தினை அறவீடு செய்யமுடியாதிருந்தது. உத்தியோகத்தரின் கவனமின்மையின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட இந்நட்டத்தினை பொறுப்பானவர்களிடமிருந்து அறவீடு செய்யப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு இது ஒரு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்த சம்பள மீளளிப்புத் தொகையான ரூபா 1,740,732 தொகை இருந்ததுடன், அத் தொகையினுள் சபை ஊழியர் இரண்டுபேருக்குரிய 2003 ஆம் ஆண்டின் போது மீளளிக்கப்படாத ரூபா 152,140 சம்பளப் பணமொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இப்பழைய மீதியினை மீள்நிரப்புச் செய்வதற்கோ அல்லது அங்கீகாரம் பெற்று பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் நிலுவை மீதியொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

**(அ) முழுமையாகக் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 100,000 படியான 2 வேலைகள் அமுல்படுத்தப்படாமல் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) நிர்மாணங்கள்**

நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பகுதிகளின் பரீட்சிப்புக்களின் போது காணப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

(i) இஹலகம பழைய குப்பைகளை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்ட விடய இலக்கம் 10 இல் இணைக்கப்பட்டிருந்த 02 கதவுகள் மற்றும் வேலைத்திட்ட விடய இலக்கம் 02 இன் கீழ் அளவிடப்பட்டிருந்த ரூபா 4,350 தொகைகளும் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. வேலை உடன்படிக்கையின் விடய இலக்கம் 09 இன் பிரகாரம் 9.52 சதுர அடிக்கு செய்யப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட அளவானது பூர்த்தி செய்யப்பட்ட அளவிடை அறிக்கைகளின் பிரகாரம் 11.33 சதுர அடியாக கணிக்கப்பட்டு 1.82 சதுர அடிக்காக ரூபா 21,720 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

மேற்கூறப்பட்ட வேலைக்குரிய மதிப்பீடு மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 05 வேலை விடயங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலை மற்றும் கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 153,856 இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(ii) மேற்கூறப்பட்ட வேலையின் ஒப்பந்தம் மற்றும் மதபிபீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்தக்காரரின் தேவையின் அடிப்படையில் சபை செயற்பட்டிருந்தமையினால் சுற்றுலாத்துறை அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த வேலை மதிப்பீட்டிற்கு இணங்கும் வகையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிராமையால் அதற்கான கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட மொத்தப் பணமான ரூபா 1,304,538 இற்கு ஈடாக கட்டிடப் பூர்த்தி மேற்கொள்ளப்பட்டிராமையால் சுற்றுலாப் பயணிகள்

தங்கியிருக்க முடியாத நிலைமை காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக் கட்டுப்பாடு